திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, மலை வாழ் மக்களின் நலன் கருதி ஆலங்காயத்தில் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் அமைக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். வாணியம்பாடியில் உள்ள மலை வாழ் மக்களும் அங்கேதான் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த அலுவலகத்தை வாணியம்பாடிக்கு மாற்ற அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இருந்தோர் எண்ணிக்கை 181 என்று இருந்தது. இப்போது அது 575 என்று உயர்ந்து இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மலைஜாதி மக்கள் இதனால் பயன் அடைந்து இருக்கின்றனர் என்று தெரிகிறது. அதை மாற்ற வேண்டும் என்று கருதினால், அவர்கள் அடைந்து வரும் நன்மையைப் பறிப்பது போல் ஆகும்.

தனியார் தொழிற்சாலைகளில் ஏற்படும் காலியிடங்கள்

*வினா எண் 29— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு நிறுவனங்கள் மூலம் கடன் பெறும் தொழிற்சாலைகளில் ஏற்படும் வேலை வாய்ப்புகளை வேலை தேடித்தரும் அலுவலகம் மூலம் எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இல்லையென்றால், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) எடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 25—9—78 ஆம் நாளிட்ட 1138 ஆம் எண்ணுள்ள அரசாணையில் இதற்கான ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9—20.]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தனியார் சிலர் அரசின் இன்டஸ்டிரியல் பினான்ஸ் கார்ப்பரேஷன் மூலம் பெருமளவில் நிதி உதவி பெற்று தொழில் நடத்துகிறார்கள். தொழில் நடத்துகிறவர்கள் சொந்தமாகப் போடும் நிதி மிகக் குறைவானது தான். அவர்கள், நிறுவனத்தின் மானேஜர் போன்ற பெரிய

1979 அக்டோபர் 29]

பதவிகளை அவர்களே வைத்துக் கொள்கிறார்கள்; எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் இருந்து எடுப்பதில்லை. அரசு நிறுவனங்களின் மூலமாக நிதி உதவி பெறும் நிறுவனங்கள் வேலை வாய்ப்பகத்திலிருந்துதான் ஆட்களை எடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது ஏற்கனவே அரசு அறிவித்திருக்கும் சீட் ரிசர்வேஷன் எல்லாம் முறையாக அமுல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, வேலை தேடித் தரும் அலுவலகம் மூலம் ஆட்களை எடுக்கும்போது ரிசர்வேஷன் சரியாகப் பின்பற்றப்படுகிறது.

திரு. ந. தனசேகரன்: தலைவரவர்களே, முழுமையும் அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்கள்கூட நேரடியாக ஆட்களைத் தேர்ந்தெடுத்துப் போடுகிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா? தூத்துக்குடியைப் பொறுத்த வரையில் அங்கே உள்ள புதிய துறைமுகத்தில் நேரடியாக ஆட்களை நியமனம் செய்கிறார்கள் என்ற அறிவிப்பு வந்து, அரசுக்கு அதுபற்றி புகார் வந்து, அந்த புகார் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் ஆட்களை எடுக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா? ஆணையை மீறுகின்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஆணையை மீறுகின்ற நிறுவனங்கள் மீது கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, அரசு நிறுவனங்கள் மூலம் கடன் பெறுகின்ற தொழிற்சாலைகளில் அல்லது மற்ற நிறுவனங்களில் வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது வேலை தேடித்தரும் அலுவலகம் மூலமாக எடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படி நியமிக்கும்போது, முன்னேறிய சமுதாயம், பின்தங்கிய சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம் ஆகியவர்களுக்கு உரிய விகிதாச்சாரம் சரியாகப் பின்பற்றப்படுகிறதா? பின்பற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, எம்பிளாய்மென்ட் ஆபீஸ் மூலமாக ஆட்களை அனுப்பும்போது நாம் அந்த விகிதாச்சாரத்தைப் பின்பற்றுகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ள அரசு ஆணையைத் தனியார் நிறுவனங்கள் முறையாக அமுல்படுத்தவில்லை. அதைக் கட்டுப்படுத்த அல்லது ஆணையை மீறுகிறவர்களுக்குத் தண்டனை வழங்க 'பீனல் ப்ரொவிஷன்' இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கடன் உதவி பெறுகின்ற அத்தகைய நிறுவனங்களுக்கு அந்தக் கடனை மேற்கொண்டு தராமல் இருப்பதற்கும் அல்லது தந்த கடன்களை உடனடியாக வசூல் செய்வதற்கும் விதிகளை நாம் வைத்திருக்கிறோம். அதுதான் 'பீனல் ப்ரொவிஷன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, கடன் உதவி பெறும் தனியார் நிறுவனங்கள் எம்பிளாய்மென்ட் ஆபீஸ் மூலமாகத்தான் வேலைக்கு ஆட்களை எடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி, நடைபெற்றனவா என்பதை அறியும் பொருட்டு ஒவ்வொரு நிறுவனத்திலும் அல்லது தொழிற்சாலையிலும் ஆட்கள் எடுக்கப்பட்ட விவரங்களை அரசு கோரி பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நாம் அந்த உத்தரவை வேலைவாய்ப்புத் துறை மூலமாகப் போட்டிருக்கிறோம். தனியார் நிறுவனங்கள் ஆட்களைக் கேட்கும்போது வேலை வாய்ப்பு நிறுவனம் மூலமாக ஆட்களை அனுப்புகிறோம் ; அவர்கள் எடுக்கிறார்கள். இதை மீறுகிறார்கள் என்றால், எங்களுக்குத் தெரியாமல் ஆட்களை எடுத்தால், அவர்கள்மீது, எந்தத் துறை கடன் தருகிறதோ அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அரசு நிறுவனங்கள் மூலம் கடன் பெறுகின்ற ஸ்தாபனங்களில் ஏற்படுகின்ற எல்லா வேலைகளுக்கும் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் ஆட்களை எடுக்க வேண்டுமென்பது அரசின் உத்தரவா அல்லது பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்களுக்கு மட்டும் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாக ஆட்களை எடுக்க வேண்டுமென்பது அரசின் குறிப்பான உத்தரவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, எல்லா இடங்களுக்கும் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகத்தான் நியமிக்க வேண்டும். உயர் தொழில் நுட்ப அறிவு பெற்ற

1979 அக்டோபர் 29]

வர்களை மட்டும் அவர்கள் இஷ்டப்படி எடுத்துக் கொள்ளலாம் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அத்தகைய தகுதி பெற்றவர்கள் இல்லை என்ற சான்றிதழ் பெற்றுக் கொண்டால் அவர்கள் விருப்பப்படி ஆட்களை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தமிழகத்தில் இன்று பெரிய பெரிய தொழில் நிறுவனங்களில் அமைச்சரவர்கள் சொன்ன பதிலை வைத்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஆகவே, அந்த விதிவிலக்கை மாற்றுவது மட்டுமல்ல : அரசு ஆணையை சரியாகப் பின்பற்ற அரசு உத்திரவிடுமா ? இதுவரையில் அரசு ஆணையை செயல்படுத்தாத நிறுவனங்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அதோடு பிற்பட்டவர்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள 31 சதவீதம், 18 சதவீதம் சரியாக வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்தக் கடன் தரும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் உரிய பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, வேலை வாய்ப்புத் துறை மூலம்தான் கடன் பெறும் தனியார் நிறுவனங்கள் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று உத்தரவு இருப்பதாகச் சொன்னார்கள். அதன் காரணமாக அனுபவத்தின் வாயிலாக பணி செய்கின்ற ''மெக்கானிக்'' போன்றவர்கள் வேலைவாய்ப்பு பெறும் சூழ்நிலை இல்லாமல் போய்விடுகிறது. கிராமப்புறங்களில் இருக்கின்ற அத்தகைய மெக்கானிக்குகளுக்கு வேலை கிடைக்கின்ற வகையில் அந்த உத்தரவை ரத்து செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே, பல்வேறு தொழிற்சாலைகளில் நாம் அதை அமுல் நடத்துகிற போது, அந்தத் தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்ற பகுதி களிலே இருக்கின்றவர்களுக்கு உரிய வாய்ப்புக் கிடைக்காமல் போகக்கூடிய நிலைமை இந்த உத்திரவாலே இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், ஒழுங்குபடுத்து வதற்காக, முறைப்படுத்துவதற்காக அதை அமுல்படுத்துகி றோம். எனவே, இதை ரத்து செய்கின்ற வாய்ப்பு இப்பொழுது இல்லை.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, பல தொழிற் சாலைகளில் அப்ரெண்டிஸ் என்ற முறையில் ஆள் எடுக்கிறார்கள். அப்படி அப்ரெண்டிஸாக எடுக்கப்படுகிறவர்களுக்கு அரசாங் கத்திடம் இருந்து மானியம் பெற்று சம்பளம் கொடுக்கிறார்கள்.

அப்படி எடுக்கின்றவர்களுக்காவது வேலை வாய்ப்பு தேடித் தரும் அலுவலகத்தின் மூலமாகத்தான் எடுக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு இட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்ரெண்டிஸ்ஸாகச் சேரும் தொழிலாளர்களுக்கு அதே தொழிற்சாலையில் வேலை கொடுக்க வேண்டுமென்று அர்த்தம் அல்ல. ஆனால், அப்ரெண்டிஸ்களுக்கென தனி அமைப்பு இருக்கிறது, தனிச் சட்டம் இருக்கிறது. அதன்படி அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளூரிலே படித்த, வேலைக்கு தகுதியாக இருப்பவர்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நம்பர் கேட்டால் அனுப்ப மறுக்கிறார்கள். அப்படி உள்ளூரில் படித்து, வேலைக்கு தகுதியாக இருப்பவர்களுக்கு நம்பர்களை அனுப்ப வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ? அப்படி அனுப்பினால் தான், படித்த, தகுதியுள்ள, உள்ளூர்காரர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி அப்படி ஒரு முன்னுரிமை தருகிற வாய்ப்பில்லை.

சென்னை மாநகராட்சியில் பணிகளில் உள்ள வெற்றிடங்கள்

*வினா எண். 30— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு, விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிருவாகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பல பதவிகள் காலி ஏற்பட்டும் அவைகள் நிரப்பப் படாமல் இருக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அவைகளை நிரப்ப எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) காலியாக உள்ள பதவிகள் தேவை ஏற்படும்போது நிரப்பப்பட்டு வருகின்றன.